**OPEN ACCESS**

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 12.04.2020

Accepted: 06.06.2020

Published: 01.07.2020

Citation:
Ravishankar, C. (2020). S.V. Subramaniam's Tholkappiya Eloquence. Shanlax International Journal of Tamil Research, 5(1), 98–106.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3404

*Corresponding Author:
kailairavisankar@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# S.V. Subramaniam's Tholkappiya Eloquence

**Dr. C. Ravishankar**
*Assistant Professor, Department of Comparative Literature*
*Madurai Kamarajar University, Madurai, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-7851-3779

**Abstract -** Tholkappiyam illustrates the grammar of the Tamil language. Since the Tholkappiyam was composed many centuries ago, the meaning or meaning of the threads in the text is not clear to anyone. So at many times many orators wrote texts with words and meanings of their time. They are still writing the text today. In that sense, many texts have been written from Ilampooranar to the present day. This article examines the special features and examples found in the speeches of S.V. Subramaniam among them.

**Key Words:** Tamil Ancient grammer, S.V. Subramaniam, Tholkappiyam, Tamil language, Ilampooranar, Tolkappiya.

**References**

1. Aravindan, M. Y., Text Writers, P.188
2. Mohan, N. Cokkalingam Urai Marabu, P.130
3. Manickanar, V.Sp. Tolkappiya Kadal, P.265
4. Tamilannal,Vurai Vilakku, P.134.
5. Manickanar, V.Sp. Tolkappiya Kadal, P.266.

# ச.வே. சுப்பிரமணியனாரின் தொல்காப்பிய உரைத் திறன்

*முனைவர் செ. ரவிசங்கர்*
உதவிப் பேராசிரியர், ஒப்பிலக்கியத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தமிழியற்புலம், மதுரை

***ஆய்வுச்சுருக்கம்:*** *தமிழ் மொழியின் இலக்கணத்தை எடுத்துக்காட்டுகின்ற நூலாகத் தொல்காப்பியம் விளங்குகிறது. அது பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டதால் அந்நூலில் இடம் பெற்றுள்ள நூற்பாக்களின் விளக்கம் அல்லது பொருள் தெளிவாகப் புரியவில்லை. பல பல உரையாசிரியர்கள் தங்களது காலத்துக்கேற்ற சொற்களையும் பொருள்களையும் கொண்டு உரையெழுதினர். இன்றும் கொண்டுள்ளனர். அந்த வகையில் இளம்பூரணர் முதல் இன்று வரையில் பல உரையாசிரியர்கள் உரை வரைந்துள்ளனர். அவர்களில் ச.வே.சுப்பிரமணியரின் உரைகளில் இடம் பெற்றுள்ள எடுத்துக்காட்டுக்களையும் சிறப்புக்களையும் இக்கட்டுரை ஆராய்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் மரபிலக்கணம், தொல்காப்பியம், ச. வே. சுப்பிரமணியம், தமிழ் மொழி, இலம்பூரனார்*

## உரை

பழங்காலங்களில் எழுதப்பட்ட அனைத்து நூல்களுக்கும் உரை என்பது வாய்மொழி விளக்கமாகவே இருந்து வந்துள்ளது. தொடக்க காலங்களில் உரை இல்லாமல்தான் இருந்தது. அதாவது "நூல்கள் தோன்றிய காலத்தில் அவை எல்லோருக்கும் விளங்கும் நிலையில் இருந்தன. உரையும் விளக்கமும் இல்லாத மூலநூல்களே அனைவரும் கற்று மகிழும் இயல்பினவாய் இருந்தன. பேராசிரியர் தொல்காப்பிய உரையில் உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டு. (மரபியல் 98) என்றும் "உதாரணங் காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரைநடந்த காலமும் உடையவாகும். முற்காலத்து நூல்கள்" (மரபியல் 101) என்றும் கூறியுள்ள கருத்துக்கள் சிந்திக்கத்தக்கன என்று மு.வை. அரவிந்தன் கூறியுள்ளார். இதனடிப்படையில் பார்க்கும்போது தொடக்க காலம் உரை இல்லாத காலமாக இருந்துள்ளது.

## உரைக்கு உரை

காலஞ் செல்லச்செல்ல கருத்துக்கள் மாறமாற நூலுக்கு உரைத் தேவையானது. அப்போது அந்தக்காலத்தில் இருந்த விளக்கங்களையே உரையாகப் பயன்படுத்தினர். இது காலம் மாறுகின்றபோது புரியாமல் போனது. எனவே, அந்த உரைக்கு ஒரு உரைத் தேவைப்பட்டது. உரையாசிரியர்கள் எழுதிய உரை விளக்கங்கள், காலப்போக்கில் விளங்காத நிலையை அடைந்தன. அதனால் உரைக்கு உரைகள் எழுத வேண்டிய தேவை ஏற்பட்டது. அதன் விளைவாக உரைக்குப் உரை தோன்றின. இதனடிப்படையில் தான் இன்றளவும் தொல்காப்பியத்திற்குப் பல உரைகள் தோன்றியுள்ளன.

## உரையாசிரியர்கள் யார்?

தொல்காப்பியம் போன்ற நூல்களுக்கு உரை தருகின்ற உரையாசிரியர்கள் யார்? எனில் தமது சிந்தனைக்கு எட்டிய ஆய்வறிவினை அனைவருக்கும் தரவேண்டும் என்று

எண்ணுபவர்கள். அதாவது "இவ்வுலகில் முழுமை அடைந்தவர்கள் இரு வகையினர் ஆவர். உண்மையை அறிந்து பின் பிறரைப் பற்றிய சிந்தனையில்லாமல் தாம் மட்டும் அவ்வுண்மையை நுகர்ந்துகொண்டு வளர இருப்பவர் ஒருசாரார். அறியப் பெற்ற உண்மையைத் தாம் மட்டும் நுகர்வதால் மகிழ்ச்சி அடையாமல் எம்மோடு உண்மையை அனுபவிக்க வாருங்கள் என்று மற்றவரையும் கூவி அழைக்கும் இயல்புடையோர் இன்னொரு சாரார் என்று இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறியுள்ள கருத்து இங்கே நினைவ கூறத்தக்கது என்று அரவிந்தன் தமது நூலில் கூறியுள்ளளர். அந்தவகையில் உரையாசிரியர், தாம் பெற்ற இன்பத்தை மற்றவர்களும் பெற வேண்டும் என்று எண்ணியவர்கள்.

## தொல்காப்பிய உரையாசிரியர்கள்

தொல்காப்பியத்திற்குப் பலர் உரையெழுதியுள்ளனர். அவர்களில் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், கல்லாடனார், தெய்வச்சிலையார் போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள். அதற்கடுத்த காலங்களில் எளிய முறையில் உரை தந்தவர்கள் சிவலிங்கனார், தமிழண்ணல், ச.வே.சுப்பிரமணியனார். இவர்களுக்கு அடுத்தும் சிலர் உரை யெழுதியுள்ளனர்.

## ச.வே.சுப்பிரமணியனாரின் உரைச் சிறப்பு

ச.வே.சுப்பிரமணியனார் பல்வேறு வகையான நூல்களைப் பதுப்பித்துள்ளார். காப்பியங்கள் குறித்து ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளார். அவர் தொல்காப்பியத்தைக் கையட க்கப் பதிப்பாக வெளியிட்டபின்பு அது மாணவர்களுக்கான நூலாக இன்றளவும் உள்ளது. அவற்றில் உள்ள உரை தெளிவாகவும், எளிமையாகவும், அமைந்துள்ளது. எனவே, அந்நூல் மாணவர்களால் அதிகமாக நேசிக்கப்படுகிறது.

## உரையின் உள்ளடக்கம்

ச.வே.சுப்பிரமணியானாரின் உரையின் உள்ளடக்கமாகச் சிலவற்றைக் காணலாம்.

1. எளிய விளக்கம்
2. தமிழ் உணர்வு
3. நடைமுறையிலான சொற்கள்
4. அறிந்த சொற்களை எடுத்துக்காட்டுவது
5. அடுக்குச் சொற்கள் அமைப்பது
6. தொடர் வாக்கியங்களை எடுத்துக்காட்டாகத் தருதல்
7. பழைய உரையாளர்களின் எடுத்துக்காட்டுகளைத் தருதல்

இவையெல்லாம் ச.வே.சுப்பிரமணியாரின் உரைகளில் காண முடிகின்றன.

## எளிய விளக்கம்

தொல்காப்பியத்திற்கு உரை வகுத்தவர்கள் காலத்திற்கேற்ற எளிய சொற்களைக் கொண்டு விளக்கம் தந்துள்ளனர். ஒரு காலத்தில் உரையாளர்கள் தங்கள் புலமையைக் காட்டத் தொடங்கியதன் விளைவாக "எளிய நடையே நல்ல நடை என்ற கொள்கை இளம் பூரணருக்குப் பின் மெல்ல மெல்லமறைந்து விட்டது. அதனால் எளிய நடையில் எழுதப்பட்ட இளம்பூரணர் உரை ஒதுங்கியது. பலமுறை கற்று உணரும் நுட்பம் வாய்ந்து, எதுகை மோனைகள் அமைந்து, பல்வேறு வகையான இனிய உவமைகள் விரவி இன்னோசை பொருந்திய பிற்கால உரைகள் செல்வாக்குப் பெற்றுப் பரவின"[1] இப்போக்கு நடைமுறைக்குப் பயன்படவில்லை. அதுவும் தற்போதைய நிலையில் எளிய நடையிலான உரை தேவையாகி விட்டது. இச்சூழ்நிலையில் ச.வே.சு. எளிய உரையைத் தந்துள்ளார்.

சொல்லதிகாரத்தின் கிளவியாக்கத்தில் கிளவியாக்கம் என்பதற்கு நச்சினார்க்கினியர் "வழுக்களைந்து சொற்களை அமைத்துக் கோடலின், இவ்வோத்துக் கிளவியாக்கம் என்னும் பெயர் பெற்றது. இனிச் சொற்கள்

பொருள்கள் மேல் ஆமாறு உணர்த் தினமையின் கிளவியாக்கம் என்னும் பெயர் பெற்றது என்றுமாம் என்று உரை தந்துள்ளார்.

**இளம் பூரணார்**

"கிளவிகள் பொருண்மே லாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்து" என்கிறார்.

**சேனாவரையர்**

வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான், இவ்வோத்துக் கிளவியாக்கம் ஆயிற்று என்கிறார்.

**கல்லாடர்**

கிளவி என்பது சொல்; ஆக்கம் என்பது சொற்கள் பொருள்கள் மேலாமாறு சொற்கள் பொருள்கண் மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கமென்னும் பெயர்த்து" என்கிறார்.

**தெய்வச்சிலையார்**

கிளவியாக்கம் அது கிளவிய தாக்கமென விரியும். அதற்குப் பொருள், சொல்லினது தொடர்ச்சி யென்றவாறு சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருண்மேலாகு நிலைமையக் கிளவியாக்க மென்றார் என்கிறார்.

இவ்வாறாகச் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியுள்ள உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர். இந்த உரைகள் இன்று புரியுமா? என்பது கேள்வியாகவே இருந்து வருகிறது. ச.வே.சுப்பிரமணியன் தருகின்ற உரை: கிளவி-சொல், சொற்களை ஆக்கிக் கொள்ளுதல், எவ்வாறு பேசுவது, எவ்வாறு எழுதுவது, சொற்களை எவ்வாறு பயன்கொள்ள வேண்டும் போன்ற செய்திகள் கூறப் பெற்றுள்ளன, என்பதாகும்.

இதனை வாசித்தால் கிளவியாக்கம் என்பதும் அப்பகுதிக்குள் இடம் பெற்றுள்ள செய்திகளும் தெளிவாக மாணவர்களுக்குப் புரிந்து விடும். இதுபோன்று தொல்காப்பியம் முழுமைக்கும் எளிய விளக்கத்தோடு உரையைத் தந்துள்ளார்.

**தமிழ் உணர்வு**

உரையாசிரியர்களில் பலருக்கும் தமிழ் மீது உணர்வு இருந்துள்ளது. ஆனால் அவர்கள் எடுத்துக்காட்டுகளில் தமிழ், தமிழன் போன்ற சொற்களைப் பயன்படுத்துவது குறைவு. ஆனால் ச.வே.சுப்பிரமணியன் பல்வேறான இடங்களில் எடுத்துக்காட்டுகளை தமிழ் சார்ந்து கொடுத்துள்ளார்.

> **சொல்லதிகாரம் பெயரியல் நூட்பா 11**
> **"நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே**
> **வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே"**

என்னும் நூற்பாவிற்குத் தமிழூரான், சேரன், பாண்டியன் போன்ற எடுத்துக்காட்டுக்களைக் கொண்டு உரை வகுத்துள்ளார். மேலும் வினையியலில் அமைந்துள்ள

> **அதுச் சொல் வேற்றுமை உடையானும்**
> **கண் எண் வேற்றுமை நிலத்தினானும்**
> **ஒப்பினானும் பண்பினானும் என்று**
> **அப்பால் காலம் குறிப்பொடு கொள்ளும்**
> **(வினை-16)**

என்னும் நூற்பாவிற்கு உரை தரும்போது இடம் பொருள் என்பதற்கு "தமிழூரான்" என்று எடுத்துக்காட்டு தருகிறார். வியங்கோள் வினை" கூறுகின்ற வினையியலில்

> **முன்னிலை தன்மை ஆயீரிடத்தொடும்**
> **மன்னாதாகும் வியங்கோள் கிளவி (29)**

என்னும் நூற்பாவிற்கு விளக்கம் தரும்போது ச.வே.சுப்பிரமணியன் "வியங்கோள் வினைச்சொல் படர்க்கையில் மட்டும் வரும். முன்னிலை தன்மையில் வராது. அவர் வெல்க, "தமிழ் வாழ்க", தமிழர் வாழ்க" என்று கூறுகின்றார்.

இங்கு “தமிழ்” உணர்வு மிகுதியாக ச.வே. சுப்பிரமணியாரிடம் நிரம்பியுள்ளதைக் காணமுடிகிறது.

தமிழின் மீது கொண்ட பெரும் பற்றினால் தான் உருவாக்கிய தமிழூர் என்னும் ஊரைத் தமது தொல்காப்பிய உரையில் பயன்படுத்தியுள்ளார். அதாவது சொல்லதிகாரம், எச்சவியல் நூட்பா 26 இல்

**வாரா மரபின வரக் கூறுதலும்**
**என்னா மரபின எனக் கூறுதலும்**
**அன்னவை எல்லாம் அவற்றவற்றியல்பான்**
**இன்ன என்னும் குறிப்புரை ஆகும்.**

என்பதற்கு உரை தரும்போது “இன்னும் சிறிது சென்றால் தமிழூர் வந்து விடும்:- வாரா மரபினவரக் கூறுதல், மழை மழை என்கிறது பயிர் - என்னா மரபின எனக் கூறுதல். இவை குறிப்பால் தமிழூர் அருகிலுள்ளது எனவும் பயிருக்கு மழை தேவை எனவும் உணர்த்தப் பெறுகின்றன என்று உரையை முன் வைக்கிறார். இங்குத் தமிழூர் இடம் பெறுகிறது, இது ஆசிரியரின் தமிழ் உணர்வை வெளிப்படுத்துகிறது.

**நடைமுறையில் உள்ள சொற்களைப் பயன்படுத்துதல்**

காலத்துக்கேற்ற சொற்களை குறிப்பாக நடைமுறையில் இருக்கின்ற சொற்களைக் கொண்டு உரை எழுதும் பண்பு ச.வே. சுப்பிரமணியனாரிடம் காண முடிகின்றது. பெயர்சொல்லின் இலக்கணம் பற்றிப் பேசும் தொல்காப்பியர்

**பெயர் எனப்படுபவை தெரியுங் காலை**
**உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்**
**ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்**
**அம்மூள் உருவின தோன்ற யாறே**
**- (பெயரியல் 6)**

என்று எழுதுகிறார். இதற்கு உரை வகுத்த இளம்பூரணர் - நெறிக்கண் என்றும் சேனாவரையாரும் நெறிக்கண் என்றும் நச்சு - நெற்றிக்கண் என்றும், தெய்வச்சிலையார் - தற்கண் என்றும், கல்லாடர் - நெறிக்கண் என்றும் கூறுகின்றனர். நெறிக்கண் என்பது என்ன என்பது தற்போது புரிவதில்லை.

ச.வே.சுப்பிரமணியனார் இந்நூற்பாவிற்கு தெளிவான எடுத்துக்காட்டினைத் தந்துள்ளார். கண்ணன் - உயர்திணைக்கு உரிமை, மாடு அஃறிணைக்குரிமை, வெள்ளை - ஒருவன் பெயர், அவன் வளர்க்கும் நாயையும் குறிக்கும். இவ்வாறு வெள்ளை என்பது விரவிப் பெயராக அமையும். ஆக மூன்று வடிவாகி, மூன்று வகையாகின்றன. உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் விரவிப்பெயர் என என்று தருகிறார்.

இங்கு வெள்ளை என்பது நடைமுறையில் உள்ள சொல், அனைவருக்கும் தெரிந்த சொல். இதுபோன்று ஆசிரியர் பல இடங்களில் உரை வரைந்துள்ளார்.

பெயரியலில் 20 வது நூட்பாவிற்கு உரை தரும்போது இயற்பெயர் என்பதற் குக் “கண்ணன், கமலம் வேலு”- என்று நடைமுறையில் உள்ள பெயர்களைத் தந்துள்ளார். பிற திணை வழிப் பெயர்கள் உயர்திணை சுட்டுதல் என்பதற்கு தொல்காப்பியத்தில் அமைந்துள்ள

“திணையொடு பழகிய பெயரலங் கடையே” (பெ-43) நூட்பாவிற்கு நடைமுறை சார்ந்த சொற்களால் எடுத்துக்காட்டுக்களைக் கொடுத்துள்ளார். “விடலை, மீளி, காளை போன்ற திணை சார்ந்த சொற்கள் உயர்திணையைச் சுட்டும். இவை அல்லாதன அஃறிணையைச் சுட்டும்” என்கிறார். இதில் விடலை, காளை என்பது நடைமுறையில் இன்றும் உள்ள சொற்கள் ஆகும்.

*வினையியலில் காலங்காட்டும் வினையெச்ச ஒட்டுக்கள் குறித்து அமைந்துள்ள*

**பின்முன் கால் கடை வழி இடத்து என்னும்**
**அன்ன மரபின் காலங் கண்ணிய**
**என்ன கிளவியும் அவற்றியல் பினவே**
**(-வினை 32)**

என்னும் நூட்பாவிற்கு ச.வே.சு.தந்துள்ள உரை சிறப்பு வாய்ந்தது என்பதைவிட எளிய நடைமுறைச் சொற்களால் ஆனது என்பது திண்ணம். படிப்பதன், வருமுன், வந்தக்கால், வந்தக்கடை, வந்தவழி, வந்த இடத்து, இவ்வாறு வினையெச்ச ஒட்டுக்கள் பல. வான், பான், பாக்கு, ஆல், மல் போன்றன. இவை வினையெச்ச இயல்பின என்கிறார். இதில் பெரும்பான்மையான சொற்கள் தற்போதும் வழக்கில் உள்ளன.

பொதுவாக உரையாசிரியர் தமக்கு முன்பு தோன்றிய உரையாசிரியர்களின் கருத்துக்களை மறுத்துரைப்பது உண்டு. ஆனால் எல்லா இடமும் மறுத்துரைக்க முடியாது. சில இடங்களில்தான் அது பொருந்தும். குறிப்பாகச் "சேனாவரையர், தமக்கு முன் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதிச் சென்ற இளம்பூரணர் கொள்கைகளை ஐம்பதிற்கு மேற்பட்ட இடங்களில் மறுத்து வேறு உரை கூறுகின்றார். அவரிடம் பெருமதிப்பும் அச்சமும் கொண்டவராய் நயமாகத் தம் கருத்தை உரைக்கின்றார், இளம்பூரணர் உரைப் போக்கினை நன்கு உணர்ந்துள்ளார். அவரது கருத்தையும் கொள்கையையும் கசடறத் தெளிந்துள்ளார்"[2] என்று கூறுகின்றனர். இரா.மோகன், சொக்கலிங்கம், இக்கருத்து ஏற்புடையதே. ச.வே.சுப்பிரமணியாரும் முன்னோர் கருத்தை மறுக்காமல் புதிய எடுத்துக்காட்டுகளை மட்டுமே தந்து சென்றுள்ளார். இது உரையாசிரியர்கள் பண்பாக விளங்குகின்றது.

***அறிந்த சொற்களை எடுத்துக்காட்டுதல்***

இலக்கணம் எளிதாக புரியாத சூழ்நிலை இன்று உருவாகியுள்ளது. அதுபோன்ற நேரத்தில் அனைவராலும் அறிந்த சொற்களையும் தொடர்களையும் தொல்காப்பிய நூட்பாக்களுக்கு உரையாகத் தரும்போது இலக்கணம் எளிதாகப் பலராலும் புரிந்து கொள்ளப்படும். ச.வே.சு.சொல்லதிகாரத்தில் அனைவராலும் அறிந்த சொற்களையும் தொடர்களையும் கொண்டு உரைவரைந்துள்ளார். அது சிறப்பானதாக அமைந்துள்ளது.

பொருண்மை - குறிப்பும் வெளிப்படையும் என்பதில் அமைந்துள்ள

**"தெரிபு வேறுநிலையிலும் குறிப்பின் தோன்றலும்**
**இருபாற்றென்ப பொருண்மை நிலையே"**
**(பெ-3)**

என்னும் நூற்பாவிற்குப் பலரும் பலவிதமான எடுத்துக்காட்டுக்களைக் கொடுத்துள்ளனர். ஆனால் ச.வே.சு. நல்ல ஆள் ஐயா நீர்" என்று கூறும்போது புறநிலையில் தெரிவது நல்ல ஆள் என்பது குறிப்பால் தோன்றுவது நல்ல ஆள் இல்லை என்பது" என உரை தந்துள்ளார். இது எளிமை, தெளிவு. மேலும் நெல்லை, நாகர்கோயில் பகுதிகளில் இன்றும் பலரால் பேசப்படும். அறியப்படும் தொடர் ஆகும். இதனால் இச்சூத்திரம் எளிதாகப் புரிந்தும் போகிறது.

வினையியலில் தன்மை பண்மை-அஃறினை உளப்படுதல் என்னும் பகுதியில் அமைந்துள்ள

**பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி**
**எண்ணியல் மருங்கின் திரிபவை உளவே**
**(நூ-12)**

என்னும் நூட்பாவிற்கு உரை தந்துள்ள பலரும் பலவாறு விளக்கம் தந்துள்ளனர் சேனாவரையர். இதற்கு எடுத்துக்காட்டுத் தரும்போது "யானும் என் எஃகமுஞ் சாறும்" என்று கூறியுள்ளார். இவ்வரிக்கு விளக்கம்

தரவில்லை. எனவே இன்று இத்தொடர் புரியாத நிலையை உருவாக்கியுள்ளது.

ச.வே.சு. "தன்மையைக் கூறும் பன்மை உணர்த்தும் வினைச் சொற்கள், எண்ணும் நிலையில் உயர்திணை திரிந்து அஃறிணை இணைதலும் உண்டு. என்று தெளிவான விளக்கத்தைக் கொடுத்து,

**"நானும் என் நாயும் வருவோம்"**

என்ற எடுத்துக்காட்டையும் கொடுத்துள்ளார். இது இன்றையச் சமூகச் சூழலுக்குப் புரிதலை ஏற்படுத்துகிறது.

வினையியலில் வினையெச்சங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது தொல்காப்பியர்

**"ஏனை எச்சம் வினை முதலானும்**
**ஆன் வந்தியையும் வினை நிலையானும்**
**தாம் இயல் மருங்கின் முடியும் என்ப"**
**(வினை.35)**

என்று கூறியுள்ளார். இதற்கு உரைகண்ட சேனாவரையர், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், தெய்வச்சிலையார், கல்லாடர் அனைவரும் ஒரேமாதிரியான எடுத்துக்காட்டைக் கொடுக்கின்றனர்.

**"மழை பெய்தெனப் புகழ் பெற்றது"**

என்பதாகும். யாருமே மாற்றிப் பொருள் தரும் எடுத்துக்காட்டினைக் கெடுக்கவில்லை. இது எதனைக் கொடுக்கிறது என்பதும் புலனாகவில்லை. காரணம் உரையாசிரியர் காலங்களில் இதற்குப் பொருள் புரிந்திருக்கும். எனவே, ச.வே.சு. அவர்கள் இன்றைய காலத்தைக் கவனத்தில் கொண்டு விளக்கத்தைக் கூறுகிறார். எடுத்து க்காட்டையும் தருகிறார்.

"ஏனைய 12 வினையெச்சங்களும், வினை முதலானும் அல்லது அங்கு வந்து பொருந்தும் பிற வினை முதலானும் முடியும் என்று கூறுவர்"

(எ.கா) - வேலை செய்யின் கூலி கிடைக்கும் என்ற அனைவரும் அறிந்த தொடரை எடுத்துக்காட்டாகத் தந்துள்ளார். இதனால் தொல்காப்பியர் தந்துள்ள நூட்பா 21-வது நூற்றாண்டிலும் எளிதாகப் புரிந்து விடுகிறது.

மேற்கோள் காட்டும் தன்மையில்தான் மூல இலக்கணம் காலம் கடந்தும் தழைத்தோங்கி நிற்கிறது. பழைய உரையாளர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான எடுத்துக்காட்டுக்களைக் காட்டியுள்ளனர். காரணம் அவர்கள் காலத்தில் அத்தொடர் அனைவரும் அறிந்த தொடராக இருந்திருக்கும். இன்று அவ்வாறாக இல்லாததால் ச.வே.சு. புதிய பொருத்தமான தொடர்களைத் தமது உரையில் பயன்படுத்துகிறார்.

எச்சங்களிடையே பிற சொற்கள் வருதல் என்னும் நிலையில் தொல்காப்பியர் வினையியலில் குறிப்பிடும்போது

**தத்தம் எச்சமொடு சிவணுங்குறிப்பின்**
**எச்சொல்லாயினும் இடைநிலை வரையார்**
**(நூ-40)**

என்று சூத்திரம் தருகிறார். இதற்கு உரை பகர்கின்ற இளம்பூரணர், கல்லாடர் போன்றவர்கள். "அடுஞ் செந் நெற் சோறு" என்று எடுத்துக்காட்டுத் தருகின்றனர். ச.வே.சு அவர்கள் எளிமையான தற்காலச் சொற்களைக் கொண்டு "எச்சங்களிடையே முடிக்கும் சொற்களுக்கு. இடையில் பிற சொற்கள் வருதலை நீங்கார்" என்கிறார்.

(எ.கா) "உழுது மாட்டுடன் வந்தான்" என்று எடுத்துக்காட்டும் தருகின்றார். பழைய எடுத்துக்காட்டைவிட இன்று அனைவராலும் அறியப்பட்ட எடுத்துக் காட்டினைக் கூறியுள்ளது, சிறப்புக்குரியது.

இது தெய்வச்சிலையாரின் அடியொற்றி அமைக்கப்பட்டுள்ளது. அவர் "உழுது ஏரோடு

வந்தான்" என்று படைத்துள்ளார். ச.வே.சு. அதிலிருந்து சற்று மாறுபட்டு சான்று காட்டியுள்ளார்.

மேலும் இடையியலில் ஏ.ஓ. சொற்களுக்கு மேலும் ஒரு முடிவு என்னும்

**தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்**
**அளமின் எடுத்த இசைய என்ப**
**-(இடை-13)**

சூத்திரத்திற்கு இளம்பூரணர் உரைக்கு எடுத்துக்காட்டு தரும்போது "நீயோ கொண்டாய்" ஒஓ பெரியன்" என்று தந்து ள்ளார். சேனாவரையர் "தெளிவின்கண் வரும் ஏகாரமும் சிறப்பின்கண் வரும் ஏகாரமும் அளபான் மிக்க இசை யையுடைய வென்று சொல்லுவர் ஆசிரியர்" என்று முடித்து விடுகிறார்.

ச.வே.சு. சூத்திரத்திற்குத் தெளிவான விளக்கத்தையும் எடுத்துக்காட்டையும் தந்துள்ளார். "தெளிவைக் குறிக்கும் ஏ என்ற சொல்லும், சிறப்பைக் குறிக்கும் ஓ என்ற சொல்லும் அளபெடையாக நீட்டி ஒலிக்கும் ஓசையாக வரும். (எ.கா.) "வாய்மையோ வெல்லும்" என்பதாகும்.

இங்கு அனைவரும் அறிந்த தொடரான "வாய்மையே வெல்லும்" என்னும் தொடரைச் சான்றாகத் தந்துள்ளார். இதன் பயன், எடுத்துக்காட்டைக் கொண்டு சூத்திரத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

ச.வே. சுப்பிரமணியன் அறிந்த சொற்களையும், தொடர்களையும் கொண்டு தொல்காப்பியத்திற்கு உரை வகுத்துள்ளார். உரையாசிரியர்களின் எடுத்துக்காட் டுக்களைப் பற்றி திறனுரைக்கும் வ.சுப. மாணிக்கம் "உரையாசிரியர்களின் எடுத்துக்காட்டுக்கள் என்ற தலைப்பிட்டு ஒரு நூல் வடிவில் பெரிய ஆராய்ச்சி செய்யத்தகும்."[3] என்கிறார். இக்கூற்று சாலப் பொருந்துவதாக உள்ளது. கால வேறுபாடுகளுக்கேற்பப் பயன்படுத்தியுள்ளனர். அந்த வகையில் ச.வே.சு. தற்காலத்திற்கேற்ற எடுத்துக்காட்டுகளைக் பயன்படுத்தியுள்ளார்.

### அடுக்கிப் பல சொற்களைப் பயன்படுத்ததுதல்

ச.வே.சு. தொல்காப்பிய உரையில் அடுக்கிச் சொல்லும்போது ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக அமைகின்றன. அதன உரையின் சிறப்பு ஆகும்.

**வினைச் சொல்லின் பொது இலக்கணம் கூறும் சூத்திரமான**
**"வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது**
**நினையுங் காலைக் காலமொடு தோன்றும்**
**(நூ-1)**

என்பதற்குச் ச.வே.சு. எழுதியுள்ள உரை மிகச் சிறப்புடையது.

வினைச் சொல் என்பது வேற்றுமை ஏற்காது. ஆராயுமிடத்துக் காலத்தோடு விளங்கி நிற்கும் என்று உரைசெய்து எடுத்துக்காட்டுகளை அடுக்கிச் சொல்கிறார். (எ.கா.) அறிந்தான் உழைத்தான், உயர்ந்தான். இங்கு ஒரு எடுத்துக்காட்டு போதுமானது. ஆசிரியர் மூன்று எடுத்துக் காட்டுக்களைக் கொடுத்துள்ளார்.

சேனாவரையர் இச்சூத்திரத்திற்கு உரை நல்கும் போது "வினையென்ற சொல்லப்படுவது வேற்றுமையொடு பொருந்தாது ஆராயுங்காற் காலத்தொடு புலப்படும்" என்கிறார். எ.கா. தரும்போது "உண்டான்" என்கிறார். இதில் இருந்து ச.வே.சு. வேறுபட்டு மூன்ற சொற்களை வரிசைப்படுத்தியுள்ளார். இது எளிதாகப் புரிந்துகொள்ள உதவுகிறது.

### தொடர் வாக்கியம் தருதல்

சில நூற்பாங்க்களுக்குத் தொடர் வாக்கியங்களைப் பயன்படுத்தி எடுத்துக்காட்டுக்களைத் தந்துள்ளார் ச.வே.சுப்பிரமணியனார்.

தொல்காப்பியர் எச்ச உம்மைக்குச் சிறப்பு விதி கூறும்போது இடையியலில்

**“எஞ்சு பொருட் கிழவி செஞ்சொலாயின்**
**பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்”**
***(-வி-36)***

என்று கூறுகிறார். இதற்கு உரை வரைந்த ச.வே.சு. தெளிவான சொற்களால் “எச்சப் பொருளில் வரும் உம்மை முதலில் வராது பின்பு வரும். இடம் தந்தனர், சாப்பாடும் போட்டனர் என வரும் இடமும் தந்தனர் சாப்பாடு போட்டனர் என வராது” என்று கூறியுள்ளார். இது தொடர் வாக்கியத்தை வைத்துக்கொண்டு கூறப்பட்டுள்ள எடுத்துக்காட்டு ஆகும். இதுபோல பல இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார்.

### பழைய உரையாளர்களின் எடுத்துக்காட்டைத் தருதல்

தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு எழுதிய பல உரைகளில் உள்ள எடுத்துக்காட்டுக்களை அப்படியே சில நூற்பாக்களுக்குத தந்துள்ளார். இது ச.வே.சு. பழமை போற்றுதல் தன்மையைக் காட்டுகிறது. இத்தன்மை தொல்காப்பிய இடையியல், உரியியல் பகுதிகளில் மிகுதியாகக் காணமுடிகிறது. பெரும்பாலும் உரையாசிரியர்கள் நயங்கண்டு கூறினரேதவிரக் குறை கண்டு கூறவில்லையே என்று கேட்கலாம். ‘தொல்காப்பியர் சொல்லாது விடுத்தவற்றையோ, அவர் காலத்திலிருந்து பிறகு வழக்கிறந்தவற்றையோ பற்றிக் கூறுமிடத்து இதற்கு வழக்கு இறந்தது என்றோ”[4] என்று கூறுவர் தமிழண்ணல். இது போல ச.வே.சு. பல இடங்களில் புதிய எடுத்துக்காட்டுக்களைக் காட்டுகிறார். சில இடங்களில் முன்னோர் காட்டுகளையே தருகிறார்.

தொல்காப்பியத்திற்குப் பலரும் உரை எழுதியுள்ளனர். அவர்கள் தத்தமது காலத்திற்கேற்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். அதற்குக் காரணம் “எல்லாக் காலங்களிலும் தொல்காப்பியம் அனைத்து மக்களுக்கும் புரிய வேண்டும் என்பதுதான். சுருங்கச் சொல்லின் உரையாசிரியர்கள் கடைபிடித்த நெறிகள் எல்லாமே கற்பவர்க்குத் தெளிவு செய்யும் பெற்றியவையாகும்”[5]. என்று வ.சுப.மாணிக்கம் கூறுகிறார். மேலும் அவர் தொல்காப்பிய உரையாசிரியர்களைத் “தொல்காப்பியத் தொண்டர்கள் எனத்தகும். உரையாசிரியர்களின் தொண்டு இந்திய விடுதலைத் தொண்டர்களின் புகழ்ப் போலப் பரந்து விளங்கும் என எதிர்பார்க்கிறேன்”[6] என்கிறார். இவ்வளவு சிறப்பு வாய்ந்த உரையாசிரியர்களின் வரிசையில் ச.வே. சுப்பிரமணியனாரும் இடம் பெற்றுள்ளார்.

### முடிவுரை

இக்கட்டுரை தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தில் உள்ள எடுத்துக்காட்டுகளை மட்டும் ஆராய்ந்துள்ளது. ச.வே.சு.வின் உரை குறித்து பதிப்புச் செம்மல் மெய்யப்பன் “இந்த உரை எல்லோரையும் எளிதில் தொல்காப்பியம் கற்க வழிவகை செய்யும் என்பது என் நம்பிக்கை” என்கிறார். தமிழறிஞர் தமிழண்ணல் “தொல்காப்பியத்தை எளிய தெளிவுரை விளக்கப் பதிப்பாக, அனைவருக்கும் பயன்படும்படியாக எழுதியுள்ள இப்பதிப்பு மக்களிடம் எளிதில் சென்று சேரக் கூடியது என்கிறார். அந்தக் கூற்றுக்கள் முற்றிலும் உண்மை என்பதை இக்கட்டுரையின் மூலம் ஆராயப்பட்டுள்ளது.

### துணைநூற்ப்பட்டியல்

1 மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள் ப.188
2 இரா.மோகன், நா.சொக்கலிங்கம் உரைமரபு, ப.130
3 வ.சுப மாணிக்கம், தொல்காப்பபியக் கடல், ப.265
4 தமிழண்ணல், உரை விளக்கு.ப.134.
5 வ.சுப மாணிக்கம், தொல்காப்பியக் கடல், ப.266